தற்கு ஆள் இல்லை. அதற்கு வகை செய்யப்பட்டு இருக்கிறதா? எப்படி செய்யப்பட்டு இருக்கிறது? இந்தத் தொழிலாளர்கள் எந்த எந்த இடங்களில் குவாரிகளில், கல் உடைக்கும் இடங்களில் இருக்கிறார்களோ அங்கே போய் நிலைமையை ரிப்போர்ட் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? இந்த 2 வருடங்களில் எத்தனை கேஸ்களுக்கு பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த தமிழில் சொன்னேன். வகை செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்று பொருள். இதில் புரவைடு செய்யப்பட்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டு கொண்டு வந்து இருக்கிற சட்டத்தில் அதற்கு வகை செய்யப்பட்டு இருக்கிறது. அந்தச் சட்டம் இன்னும் அமலுக்குக் கொண்டுவரப்படவில்லை. அதற்கான ஸ்கீம்கள் தயார் செய்துகொண்டு இருக்கிறோம். அந்தச் சட்டம் அமலுக்கு வந்தபிறகு இந்தச் சலுகைகளை அந்தத் தொழிலாளர்கள் அடைவார்கள்.

பூவந்த கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

52 (*வினா எண் 17871) திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம்—திருப்புவனம் ஒன்றியம், பூவந்த கிராமத்திற்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது செயற் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) இல்லை. ஆயினும், இரண்டு ஆழ்த்துளைக்கிணறுகள் நடப்பு ஆண்டு வறட்சி நிவாரணப்பணித்திட்டத்தின் கீழ் இக்கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முதலில் சொன்ன பதில் சரியாக தெரியவில்லை. ஏற்கனவே 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அந்தக் கிராமத்திற்கு வடது பக்கத்தில் இருக்கிற ஊரணிக்கு அடுத்து நல்ல தண்ணீர் இருக்கிறது என்று கண்டு அறியப்பட்டு அதில் ஒரு ஆழ் துளை கிணறு தோண்டி குழாய் மூலம் தண்ணீர் எடுக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அதை நடைமுறைப்படுத்தவில்லை. அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 16

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த கிராமம் 6—வது வகையில் இருக்கிறது. 6—வது வகை என்றால் போது மான அளவுக்கு எப்போதும் குடிநீர்கிடைக்கிறது என்று பொருள். ஆனால் அதை 3—வது வகைக்கு மாற்றியமைக்கவேண்டும் என்ற கோரிக்கையின்மீது இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்த பரிசீலனை முடிந்த பிறகு அதை 3—வது வகைக்கு மாற்றியமைக்கப்பட உள்ளது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வகைப்படுத்துவதைப் பற்றி ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு நாங்கள் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்து இருக்கிறோம். என்னைப் பொறுத்த வரையில் நேர்த்தியாறு என்ற கிராமத்தை 6-வது வகை என்று சொன்னார்கள். அதே கிராமத்திற்கு நானேபோய் இருந்தேன். அந்த கிராமத்தில் குடிக்க தண்ணீர் இல்லை. பூவந்த கிராமத் தில் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மக்கள் 3 மைல் தூரம் சென்று தண்ணீர் எடுக்கிறார்கள். அந்தக் கிராமத்தை எப்படி 6—வது வகைக்குக் கொண்டுவந்தார்கள் என்று புரியவில்லை. ஆகவே வகைப்படுத்துவதில் ஏதோ முறைகேடுகள், தவறுகள் இருக் கின்றன. அதை ஒட்டு மொத்தமாக மாற்றியமைக்க புதிய சர்வே எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஞாபகம் சரியாக இருக்கு மானால் இந்த வகைப்படுத்துவது 1976 ஆம் ஆண்டு செய்தார்கள். அதற்கு பின்னால் அவ்வப்போது வருகிற வேண்டுகோளை இந்த அரசு பரிசீலித்து மாற்றம் செய்கிறது. இந்த சிற்றூரைப் பார்த்து 6-வது வகையிலிருந்து மாற்றம் செய்வதற்கு செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதை அவர் பார்த்து 3-வது வகை என்று சொல்லிவிட்டால் உங்களுக்கு லக்கிதான், உங்களுக்கு தண்ணீர் உடனடியாக கிராமப் புற குடிநீர் வழங்கும் திட்டத் தின் கீழ் குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

பேரணையிலிருந்து திண்டுக்கல் நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

53 (*வினா எண் 19451) திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள் மற்றும் திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை பேரணையி லிருந்து திண்டுக்கல் நகரத்திற்குக் குடிதண்ணீர் கொண்டு போகும் திட்டம் ஆய்வில் உள்ளதா?